


# HEALTH IS WEALTH.



**Ganasekaram Tharmalingam** living in Unionkulam in Kilinochchi with my family of five children all in higher school. Resettling after the war was a mental trauma. I was a daily gardening labor for others. It was a struggle to make a living. My wife started working in coconut fibre factory. Unfortunately, she had a mishap in the factory lost both her arms. Our life was miserable and shattered. She needed full time care which me and my children shared. This situation made me to do home gardening.

At this difficult times of our life KKM was God sent to us. They supported emotionally, comforted us and installed sprinkler systems, donated plants and many other needs. I was able to extend my garden for more crops and income. I was really thankful for the irrigation system which made my work load easy and save time. I was able to generate more income for living. With the present Curfew restrictions, I am very proud to serve and share my products to my neighborhood for a very reasonable price. Following the universal health and safety practice.

KKM has always given us many awareness programs, workshops in Agriculture, natural fertilizer, healthy food habits, Native plants, yams, roots and green leaves. Also conducted food demonstrations in native products and awareness of rich and high in food value to boost our immune systems. I have shared my knowledge inspiring my community with healthy wellbeing. I am sure we all can fight these challenges to eradicate COVID 19 by putting healthy food habits in practice. I thank KKM for preparing the community well head to face this challenge. In future I will continue to inspire many more in the community to follow safe and healthy food habits for happy life.

Thanking you all.

## Success photos







நான் கிளிநொச்சி மாவட்டத்தில் யூனியன்குளம் கிராமத்தில் இருந்து எனது அனுபவத்தை பகிரலாம் என நினைக்கின்றேன். எனது பெயர் ஞனசேகரம் தர்மலிங்கம் ஏனக்கு 5 பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்று வருகின்றனர். கடந்த யுத்தத்தில் பல துன்பங்களை அனுபவித்து மீண்டும் எமது கிராமத்தில் மீள்குடியேறினேன். தொழில் வாய்ப்பின்றி நாளாந்த வருமானமின்றி எனது குடும்பம் மிகவும் அவதிப்பட்டது. இருந்தாலும் சில நேரங்களில் வேறு கிராமங்களில் சென்று தோட்ட வேலை செய்து எனது குடும்பத்தை பார்த்து வந்தேன்.

பிள்ளைகள் வளர்ந்ததும், எனது மனைவியும் எமது கிராமத்தில் உள்ள தும்பு மில்லில் நாளாந்தம் கூலிவேலை செய்து அதில் சிறு வருமானத்தைகொண்டு பிள்ளைகளின் படிப்பையும் பார்த்து வந்தேன். கடந்த 2019 ஆண்டு எனது மனைவியின் இருகைகளும் தும்பு மில்லில் அகப்பட்டு இளந்துவிட்டார். முழு குடும்பப்பொறுப்பும் எனது பொறுப்பு, மனைவியுடைய மருத்துவ செலவே அதிகம். இன்நிலையில் எனது தொழில் வாய்யை மேம்படுத்துவதற்காக எனது குடும்பநிலையை பார்த்து காவேரி கலா மன்றம் எனக்கு தோட்டம் செய்வதற்கு தூவல் நீர்பாசனம் மற்றும், பைப்லைன் பொருத்தி தந்தனர். எனது வீட்டில் சிறு தோட்டம் செய்யத் தொடங்கினேன். எனது முழுநேரத்தையும் தோட்டத்தில் கழித்தேன் எனக்கு வருமானம் கிடைத்தது, வீட்டுத்தேவைகளுக்கு நல்ல மரக்கறி கிடைத்தது. இது எனது வாழ்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

காவேரி கலா மன்றம் விவசாயம் தொடர்பான பயிற்சிகள், கால்நடை மற்றும் கோழி, காடை வளர்ப்பு தொடர்பான பல பயிற்சிகள் தந்து எனக்கு மேலும் ஊக்கப்படுத்தினர். குறிப்பாக எமது காணியில் உள்ள தான்தோன்றிகளை அடையாளப்படுத்தி அதை எவ்வாறு உணவு தயாரித்து உன்பது தொடர்பான பயிற்சிகள் கொடுத்தனர். இதனால் எனது குடும்பத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக பிள்ளைகள் தொடக்கம் அனைவரும் தான்தோன்றிகளை பராமதித்தலும் நாளாந்த உணவில் சேர்ப்பதிலும் அதிகம் அக்கறை காட்டியுள்ளனர்.

தற்போது எமது நால்டில் ஏற்பட்டுள்ள இந்த நோயின் தாக்கம் எமது சமுகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தாலும், எனது வாழ்கையில் மாற்றத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி உள்ளது. எனது தோட்டத்தில் விளைகின்ற மரக்கறிகள் உள்ளூர் கடைகளில் விற்பனை செய்வதும் அயலில் உள்ளவர்கள் வீட்டிற்கே வருகின்றனர் அவர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்கின்றேன். இதனால் எனக்கு மனதில் ஒருவிதமான அறுதல் கிடைக்கின்றது. எனது தோட்டத்தில் தற்போது பீற்ரூட், கரட், கறிமிளகாய, பச்சமிளகாய், வெண்டிக்காய், கீரை, கத்தரி, பயித்தை என்பன பயிரிட்டுள்ளேன். இதனால் எனது வீட்டில் நஞ்சற்ற நிறைவான உணவுப்பழக்கவழக்கத்தை உருவாக்கியுள்ளேன். இதனால் நோயெதிர்ப்பு சத்தி உள்ளவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் இருக்கின்றோம். தற்போது பிள்ளைகளுடன் சந்தோசமாகவும் இருக்கின்றேன், எனது வாழ்கையில் மாற்றத்தை ஏற்படுத்திய காவேரி கலா மன்றத்திற்கு நன்றிகள்.